பாரதி தமிழ் வாசகம்

முதல் புத்தகம்

T B.
031 (4)
N49

பாரதி தமிழ் வாசகம்

முதல் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1949
MADRAS

V. நடராஜன், B.A., L.T.,
Divisional Inspector of Schools, Coimbatore

தமிழ்நாடு ... 600 008.

Approved by the Text Book Committee Madras.
(Vide Page 8 (Part I) & Page 22 (Part II) of the Consolidated List dated 1 6—1948)

V. S. வெங்கடராமன் கம்பெனி
...ஷர்ஸ் : : கும்பகோணம்
[விலை 4½ அணா

TB
031(1)
N49
148051.

Reprinted : March 1949

148051.

உயிரெழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

ஃ

உயிர்மெய்யெழுத்துக்கள்

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர ல

வ ழ ள ற ன

---

1 2 3 4 5 6 7 8 9 10

போதனைக் குறிப்புக்கள்

தாய்மொழிப் போதனை :—துரைத்தனத்தார் சமீப காலத்தில் வெளியிட்டுள்ள புதிய பாடதிட்டத்தில் குறிக்கப்பட்ட நோக்கத்தையும் முறையையும் அநுசரித்து இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய பாடதிட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

(i) சுயமாகவும், தாராளமாகவும் கூச்சமின்றிப் பாலர்களைப் பேசப் பழக்குதல்.

(ii) பாலர்கள் தினசரிப் பழக்கத்தில் உபயோகிக்கும் சொற்களைக் கொண்டே பாடங்கள் கற்பித்தல்.

(iii) தமிழ் எழுத்துக்களை அகர வரிசைப்படி தனித்தனியாக முதலில் போதிக்காமல் படத்தின் மூலமும், பொருள்கள் மூலமும், முழுச் சொற்களைப் பார்த்தவுடன் படிக்கும்படி பழக்கிய பிறகே எழுதப் பழக்குதல்.

(iv) விளையாட்டு முறையில் குழந்தைகளின் சுய முயற்சியைப் பெருக்கி உற்சாகத்துடன் கற்கச் செய்தல.

இப் புதிய முறைகளில் ஆசிரியர்கள் முயற்சி எடுத்துப் போதித்தால் பாலர்களுக்குப் படிப்பில் ஆசை உண்டாவதுடன், அதிக அபிவிருத்தி எளிதிலும் விரைவிலும் ஏற்படும்.

பாட முறை :—இப் புத்தகத்தில் ஒரு வருஷப் பாடத்தை நான்கு பிரிவுகளாக அமைத்திருக்கிறது.

(i) 1 முதல் 16 பக்கங்கள் வரை :—பிள்ளைகளுடன் பழகும் வீட்டு உறவினர், வீட்டுப் பிராணிகள், பட்சிகள், விளையாட்டுச் சாமான்கள், தேக உறுப்புக்கள், மரஞ் செடிகள், வீட்டுப் பொருள்கள், பள்ளிக்கூடப் பொருள்கள், வண்டி வகைகள், —இவைகளைப் பற்றி அந்தந்தப் பாடங்களில் முதலில் பிள்ளைகளுடன் தாராளமாகப் பேசியும், படத்தைப் பார்க்கச் செய்தும் பாடத்தில் உள்ள சொற்களை வருவித்துப் படிக்கச் செய்தல் இப் பகுதியில் முக்கிய அம்சமாகும். இந்தச் சொற்கள் எல்லாம் பிள்ளைகளின் அநுபவத்தில் வந்தவைகளே. படத்தையும் வார்த்தையையும் சம்பந்தப் படுத்தி முதலில் பிள்ளைகளுக்குக் காட்டி, பின்பு, படம் இல்லாமல் வார்த்தைகளை மாத்திரம் ஞாபகப்படுத்திப் படிக்குமாறு பழக்கவேண்டும். இதற்கு உபயோகமாக ஆசிரியர்கள் படங்களும் வார்த்தைகளும் உள்ள அட்டைகள், படங்கள் இல்லாமல் வார்த்தைகள் மாத்திரம் உள்ள அட்டைகள் ஆக இரண்டு வகை அட்டைகள் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பூர்

TB 031(1) N49

களின் உதவியில்லாமல் வார்த்தைகளைப் படிக்கப் பழக்குவதே பிற்பாடு செய்யும் முக்கிய வேலையாகும். இப் பகுதி முடிவில் பழைய பாடம் திருப்புவதற்கான பயிற்சியும், இதுவரையில் வந்த வார்த்தைகளின் ஜாபிதாவும் கொடுக்கப்பட்டுள.

(ii) பக்கம் 17 முதல் 25 வரை:—படங்கள் மூலம் அதிகச் சொற்களும் சிறு வாக்கியங்களும் படிக்கப் பழக்குவதுடன், எழுதவும் பழக்கித் தனி எழுத்துக்களை அறியச் செய்தல் இப் பகுதியின் நோக்கம். சுலபமான முறையில் எழுத பழக்கும்பொருட்டு ட, ப, ம, ழ, ய; வ, ல, ச, க, த, ந, ங முதலிய வரிசையில் படிப்படியாகப் பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பழைய பாடம் திருப்ப, பயிற்சியும் வார்த்தைகளின் ஜாபிதாவும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

(iii) பக்கம் 26 முதல் 33 வரை:—இப் பகுதியில் இன்னும் அதிக எழுத்துக்கள் போதிக்கப்படுகின்றன. ஆனால் உயிரெழுத்து, உயிர்மெய் எழுத்துக்கள் என்ற வரிசையில் தனியாக எழுத்துக்களைக் கொடுக்கப் புதிய முறைப்படி தேவையில்லை. இப் பகுதியிலும், பழைய பாடம் திருப்புவதற்கான பயிற்சியும் வார்த்தைகளின் ஜாபிதாவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.


(iv) பக்கம் 34 முதல் 44 முடிய:—இப் பகுதியில் பிள்ளைகளின் பழக்கத்திலுள்ள சொற்களைக் கொண்டே குழந்தைப் பாட்டுகள், படம் படித்தல், படித்துச் செய்தல், கதை முதலிய பல சுவையான பாடங்களும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் வரும் காய்கறிகள், புஷ்பங்கள், பழங்கள், பொருள்கள் முதலியவற்றைப் பிள்ளைகளைக் கொண்டு வரச் செய்து அல்லது உபாத்தியாயர் நேரில் காட்டிச் சம்பாஷித்த பின்பு படிப்பதையும், எழுதுவதையும் கற்பிக்கவேண்டும். இவ்விதம நிதர்சன முறையில் பாடங்களைக் கற்பித்தால் பையன்களின் உற்சாகம் அதிகமாகிக் கற்பதில் ஆசை உண்டாகும்.

இந்தப் புத்தகத்தில் வந்துள்ள மொத்த வார்த்தைகள் சுமார் 310 ஆகும். இப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளைப்போல் ஆசிரியர் இன்னும் பல பயிற்சிகளைத் தயார்செய்து உபயோகிக்கவேண்டும்.

அநுபவ முறையில் எழுதப்பட்டுள்ள இப் பாரதி முதல் வாசகம் பாலர்களுக்கு மிக்க பயன் அளிக்குமென்று நம்புகிறேன்.

V. நடராஜன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் ... 600 008.




பாரதி தமிழ் வாசகம்

முதற் புத்தகம்



அப்பா	**அம்மா**	**பாப்பா**
அம்மா	பாப்பா	அப்பா

குறிப்பு:—ஆரம்பத்தில் படங்கள் மூலமாகச் சொற்களை வருவித்து, முழுச் சொற்களாகப் படிக்கப பழக்கவேண்டும். ஆரம்பப் பாடங்களில் எழுத்துக்களைத் தனியாக அறியவும் எழுதவும் தேவையில்லை.




நாய்	குதிரை	பூனை
ஆடு	எருமை	பசு

பசு	ஆடு
பூனை	நாய்
குதிரை	எருமை



அணில்	எலி	ஈ
எறும்பு	தவளை	மீன்

மீன்	எலி
ஈ	எறும்பு
தவளை	அணில்




காக்கா | கிளி

கோழி | குருவி

குருவி   கோழி

கிளி   காக்கா




பந்து | பட்டம்

பம்பரம் | ஊதல்

ஊதல் பம்பரம்


பட்டம் பந்து

குறிப்பு:— (i) கீழ்வரும் படங்களின் பெயர்களைச் சொல்லச் செய்யவும்.




(ii) பின்வரும் சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டச் செய்யவும்.

காக்கா	பம்பரம்	அணில்	நாய்	கோழி
பூனை	தவளை	ஈ	மீன்	பட்டம்
ஊதல்	பசு	எலி	கிளி	எருமை
பந்து	எறும்பு	ஆடு	குருவி	குதிரை



தலை	காது	விரல்
வாய்	கண்	கை
பல்	நகம்	கால்

மூக்கு




வாழை மரம்

பூ இலை காய்

இலை வாழை மரம்

காய் பூ




தூண்	வீடு	சன்னல்
கூரை	கதவு	சுவர்

வீடு தூண்

கதவு சன்னல்


சுவர் கூரை




பெட்டி




குடம்




பூட்டு



விசிறி



சட்டி



அடுப்பு

பெட்டி	குடம்	பூட்டு
விசிறி	சட்டி	அடுப்பு

அடுப்பு சட்டி

குடம் விசிறி

பூட்டு பெட்டி



எணி	பாய்	உரல்
அம்மி	முறம்	உலக்கை

உலக்கை அம்மி

பாய் முறம்

உரல் எணி



சிப்பு | கண்ணாடி

ஊசி | நூல் | விளக்கு

நூல் கண்ணாடி

ஊசி சிப்பு

விளக்கு




புத்தகம் | சிலேட்டு | மணி

மேசை | நாற்காலி

நாற்காலி சிலேட்டு

புத்தகம் மேசை

மணி



மாட்டு வண்டி

குதிரை வண்டி

சைகிள் வண்டி

ரயில் வண்டி


மோட்டார் வண்டி

மாடு	குதிரை	சைகிள்
மோட்டார்	ரயில்	வண்டி

பயிற்சி I

குறிப்பு:—உபாத்தியாயர் பயிற்சி வினாக்களை வாசித்துப் பிள்ளைகளைக் சொல்லவும் செய்யவும் பழகவேண்டும்.

(i) படங்களின் பெயர்களைச் சொல்:—



(ii) பின்வரும் சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டு:—

மணி	கண்ணாடி	விசிறி	மரம்
புத்தகம்	இலை	பாப்பா	ஏணி
சிலேட்டு	வண்டி	நாற்காலி	சீப்பு
கண்	பெட்டி	உரல்	பூட்டு

(iii) படி :—

அம்மா	பந்து	மரம்	சட்டி
அப்பா	பம்பரம்	வீடு	ஏணி
பாப்பா	பட்டம்	கதவு	வண்டி
நாய்	ஊதல்	தூண்	உரல்
பூனை	தலை	சன்னல்	உலக்கை
ஆடு	கண்	சுவர்	ஊசி
பசு	மூக்கு	பெட்டி	நாற்காலி
அணில்	காது	விசிறி	மேசை
எலி	வாய்	சிலேட்டு	கூரை
ஈ	பல்	புத்தகம்	அம்மி
எறும்பு	கால்	குதிரை	பூட்டு
தவளை	கை	எருமை	வாழை
மீன்	விரல்	குடம்	முறம்
காக்கா	நகம்	விளக்கு	சீப்பு
கோழி	இலை	அடுப்பு	கண்ணாடி
கிளி	பூ	மணி	நூல்
குருவி	காய்	மாடு	சைக்கிள்

மோட்டார் ரயில் பாய்





பாப்பா | படம்

பாப்பா வா.

படம் பார்.


பாடம் படி.

ஊசி நூல்	உரல் உலக்கை
ஆடு மாடு	ஈ எறும்பு

பார்த்து எழுது :—

படம்





மாமா | மரம்

மாமா வா.

மரம் பார்.

குதிரை வண்டி


கால் விரல்


கை கால்

பந்து ஆடு.

பார்த்து எழுது:—

மரம்





பழம்	பாய்


அம்மா வா.


பழம் பார்.

மா மரம்	சன்னல் கதவு
மா உரல்	அம்மி குழவி

பார்த்து எழுது :—

பழம்	பாய்






வட்டம் | பாலம்

அப்பா வா.
பாலம் பார்.

நாய் வால்
மரத் தூண்
மேசை நாற்காலி
வாழை மரம்

பார்த்து எழுது:—

வட்டம் | பாலம்





சக்கரம் | புத்தகம்

வண்டிச் சக்கரம்

சக்கரம் வட்டம்

சிலேட்டுப் புத்தகம்

தாத்தா வா.

புத்தகம் படி.

எழுது :—

சக்கரம் | புத்தகம்





நாய் | மாங்காய் | ஏற்றம்

மர ஏற்றம்

நாய் நகம்



மாமா வா.

மாங்காய் தா.

பால் கற.

எழுது:—

நாய் | மாங்காய் | ஏற்றம்

மத்தளம் | ஊஞ்சல்

மத்தளம் அடி.

ஊஞ்சல் ஆடு.


பசு மாடு


மாம்பழம் தா.

பாட்டுப் பாடு.

எழுது :—

மத்தளம் | ஊஞ்சல்





கண் | சன்னல்

என் கண்

சன்னல் கதவு

மண் சுவர்

கூரை வீடு

வண்டி மாடு

ஊஞ்சல் ஆடலாம்.

பாட்டுப் பாடலாம்.

எழுது :—

கண் | என் | சன்னல்

148057.

பயிற்சி I

(i) விட்ட எழுத்தை எழுதச் சொல்லி, பிறகு வாசிக்கச் செய்யவும் :—

- க்கா  ம-தளம்  மா-காய் 

ஏ——ம் (ற்ற) ஊ— சல் (ஞ்) ச - - ல் (ன்ன)

(ii) படி:—

வா	பாடு	படம்	வட்டம்
தா	மண்	பாடம்	ஏற்றம்
பார்	என்	பழம்	ஊஞ்சல்
கற	பால்	பாலம்	மாங்காய்
படி	மாமா	தாத்தா	மாமரம்
அடி	வால்	பாட்டு	மத்தளம்

ஆடு குழவி சக்கரம்

TB [illegible] N49


(iii) எழுது:—

வா	மண்	பாலம்	மாமா
பார்	பாடம்	தாத்தா	குழவி

(iv) விதை அல்லது குச்சிகளால் வைத்துக் காட்டச் செய்யவும்:—

ட ப ம ழ ய	ச க த ந ங
வ ல	ள ன ண ற ஞ்
ர ஈ	ஊ எ ஏ

அணில் ஆடு



அணா புறா

அணில் வால் | அண்ணா வர்.

புறாப் படம் | அணா தா.

வண்ணான் வந்தானா?

கல் - கால் | படம் - பாடம்


எழுது:—

வால் | அணா | புறா

வந்தானா

குறிப்பு:—இந்தப் பாடம் முதல் சொல்வது எழுதலும் பயிற்சி செய்யலாம்.

கிளி



சீப்பு

பல்லி

மீன்

இட்டலி ஈச்ச மரம்

விசிறி கத்தி

மாச் சீப்பு | பாட்டு வா.

தம்பீ வா. | இட்டலி தா.


மணி அடி. | தண்ணீர் தா.

எழுது:—

இட்டலி | ஈ | பாட்டு

விசிறி | மீன்

குருவிக் கூடு



சூரியன்

கிணறு

ரூபாய்

உரல்	புளியமரம்
ஊதல்	தங்கக் காப்பு
தஞ்சாவூர்	பருத்தி நூல்
கல் தூண்.	மூன்று ரூபாய்


பாலு ஒரு பையன்.


பசு புல் தின்னும்.

கன்றுக்குட்டி துள்ளும்.

எழுது:—

குருவிக் கூடு	நூல்
தஞ்சாவூர்	எழுது





தென்னமரம்   தேங்காய்

எ லி   எ ணி

நெருப்புப் பெட்டி

தேங்காய் எண்ணெய்

நேராக நில்.

கீழே இறங்கு.

பல் தேய்.

உள்ளே வா.


ஆப்பம் தின்னு.

வெயிலில் திரியாதே.

எழுது :—

தென்ன மரம்

தேங்காய் எண்ணெய்

ஒன்று  ஓணான்

கொக்கு கோயில்

பூந் தோட்டம்

தென்னந் தோப்பு

பொங்கல் பண்டிகை

ஓணான் ஓடும்.

நீர்மோர் குடி.

வேறொரு புத்தகம் எடு.

எழுது:—

ஒன்று	கொக்கு
வேறொரு	ஓணான்




படத்தில் காட்டு :—

குடை	பை	தலை
தவளை	பூனை	பூமாலை

படித்துச் செய் :—

இடுப்பில் கை வை.
இரண்டு தடவை குதி.
கையைத் தொங்கவிடு.

நிமிர்ந்து நில்.
வெளியே போ.
உள்ளே வா.



வௌவால்

மாமா சௌக்கியமா ?


எழுது :—

பூனை | தவளை

வௌவால்

பயிற்சி III

(i) படங்களின் பெயர்களை எழுது :—



(ii) தனியாக உள்ள எழுத்தைக் கோட்டின் மேல் எழுது. பிறகு வாசி :—

அக்—(கா) | வெற்—லை(றி)

கு—ம் (ள) | ப—மரம் (னை)

வே—செய். (லை)

ம—யில் நனையாதே. (ழை)

வௌ—ல் பறக்கும். (வா)

(iii) படி :—

வை	காப்பு	தடவை	இடுப்பு
போ	அணா	புறா	தங்கம்
தில்	ரூபாய்	பல்லி	பருத்தி
ஓடு	அண்ணன்	ஓணான்	வெற்றிலை
தேய்	அக்காள்	கொக்கு	சூரியன்
செய்	தம்பி	வௌவால்	வெயில்
குடி	பாட்டி	கன்றுக்குட்டி	மழை
எடு	பையன்	தென்னை மரம்	நெருப்பு
குதி	வண்ணான்	பனை மரம்	கல்
பற	கோயில்	ஈச்ச மரம்	நீர்
திமிர்	தோப்பு	புளிய மரம்	மோர்
தள்ளு	தோட்டம்	கீழே	தேங்காய்
எழுது	கிணறு	வெளியே	எண்ணெய்
தின்னு	குளம்	உள்ளே	தண்ணீர்
பை	புல்	நேராக	இட்லி
கூடு	ஒரு	இறங்கு	ஆப்பம்
குடை	ஒன்று	திரியாதே	பொங்கல்
மாலை	இரண்டு	வந்தான்	பண்டிகை
வேலை	மூன்று	நனையாதே	தஞ்சாவூர்
கத்தி	வேறொரு	தொங்கவிடு	சௌக்கியம்

பாட்டு

உரலில் நெல்லைப் போட்டு
உலக்கையாலே குத்தி
உமியை நன்ருய்ப் போக்க
உண்ண நல்ல அரிசி.

எழுது:—

நெல்	உமி	அரிசி
போடு	நல்ல	நன்ருய்
குத்து	உண்ண	நெல்லை

விளையாடிக் காட்டு:—

1. நில். புத்தகத்தை எடு. திற. படி. மூடு. கீழே வை.

   கையை தட்டு. சலாம் செய். உட்கார்.


2. சிலேட்டை எடு. கண்ணை மூடிக்கொள். ஏணி எழுது. கண்ணைத் திற.

குறிப்பு:—இந்தப் படங்களில் வரும் காய், பழம், பூ இவைகளை உபாத்தியாயர் நேரில் கொண்டுவந்து காட்டவேண்டும்.




படத்தில் உள்ள காய்களின் பெயர்களைச் சொல். பிறகு எழுது.

1.
2.
3.
4.
5.
6.
7.
8.



பழங்களின் பெயர்களைச் சொல். பிறகு எழுது.

1.
2.
3.
4.
5.
6.



அரளி	மல்லிகை	பூவரசம்பூ
அல்லி	தாமரைப்பூ	செவ்வந்தி

1. படத்திலுள்ள பூக்களின் பெயர்களை எழுது.
2. சிலேட்டில் இவைகளின் படம் போடு. ஒவ்வொன்றுக்கும் வர்ணச் சாக்கட்டியினால் சரியான வர்ணம் பூசு.

வாழைக்காய், மிளகாய்ப்பழம், எலுமிச்சம்பழம்,
ஆரஞ்சுப்பழம், மாம்பழம், அரளிப்பூ,
பூவரசம் பூ, தாமரை மொட்டு.

பாட்டு

கைகொட்டு பாப்பா கைகொட்டு
கடைக்குப் போகலாம் கைகொட்டு
பொம்மை வாங்கலாம் கைகொட்டு
மிட்டாய் வாங்கலாம் கைகொட்டு
மெதுவாய்த் தின்னலாம் கைகொட்டு.

நாம் விளையாடுவோம்



நான் பம்பரம் சுற்றுகிறேன்.

நீ பட்டம் விடுகிறாய்.

அவன் கோலி ஆடுகிறான்.

இவள் கயிறு தாண்டுகிறாள்.

இவர்கள் பந்து அடிக்கிறார்கள்.

அவர்கள் ஓடுகிறார்கள்.

இந்தப் பெண்கள் பாண்டி
ஆடுகிறார்கள்.

எழுது:—

நான்	நீ	அவன்	இவன்
நாம்	நீங்கள்	அவர்கள்	இவர்கள்

என்ன செய்வேன்?

காலையில் எழுந்திருப்பேன்.
பல் தேய்ப்பேன்.
முகம் கழுவுவேன்.
உடல் குளிப்பேன்.
சுத்த உடை கட்டுவேன்.
சாதம் சாப்பிடுவேன்.
பள்ளிக்கூடம் போவேன்.
பாடம் படிப்பேன்.
மாலையில் ஓடி விளையாடுவேன்.
இரவில் தூங்குவேன்.



என்ன செய்யமாட்டேன்?

குப்பை — மாட்டேன். (போட)

வண்டி பின்னால் — மாட்டேன். (ஓட)

ஒருவரையும் — மாட்டேன். (திட்ட)

காயம் பட்டால் — மாட்டேன். (அழ)

பாட்டு

உருட்டுச் சட்டி பொம்மை இது
உருண்டு உருண்டு ஆடும் இது

தஞ்சாவூர் ரயிலடியில்
தம்பிப் பாப்பா அழுதபோது
சின்ன அத்தான் வாங்கித் தந்த
சிரான பொம்மை இது.

மோட்டார் வண்டி அது
வேகமாக ஓடும் அது

பாட்டனர் வாங்கியதது
பட்சமுடன் தந்ததது.

என்ன செய்கிறார்கள்?



இவள் சமைக்கிறாள்.

இவள் ராட்டை சுற்றுகிறாள்.

இவன் கூடை முடைகிறான்.




அவன் ஏர் உழுகிறான்.

அவன் துணி நெய்கிறான்.

அவன் சட்டை தைக்கிறான்.

பேராசை கொண்ட நாய்



இது ஒரு பாலம்.

பாலத்தில் நிற்பது ஒரு நாய்.

நாயின் வாயில் ஆப்பம் பார்.

பார்! தண்ணீரில் நாயின் நிழல்.

நிழல் வாயில் ஓர் ஆப்பம்.

அந்த ஆப்பத்தைக் கௌவ நாய் வாயைத் திறந்தது.

நாயின் ஆப்பம் தண்ணீரில் விழுந்தது.

நிழல் வாயில் ஆப்பம் எங்கே?

நாய்க்கு இருந்த ஆப்பமும் போனது.

படம் படித்தல்

1. முதல் பக்கத்திற்கு எதிரில் உள்ள வர்ணப் படத்தைப் பார்.

2. படத்தில் காட்டு:—

   அம்மா, அப்பா, பாப்பா, பையன், பெண்.

3. மேசைமேல் என்ன இருக்கிறது?

4. அப்பா எதில் உட்கார்ந்திருக்கிறார்?

5. பையன் பெயர் சுந்தரம். அவன் என்ன செய்கிறான்?

6. பெண்ணின் பெயர் கமலா. அவள் எதனுடன் விளையாடுகிறாள்?


7. அம்மா என்ன செய்கிறாள்?

8. படத்தில் உள்ள ஆறு பொருள்களின் பெயரை எழுது.

பயிற்சி IV

(i) இந்தப் படங்களைப் படி:—





(ii) கேள்விகள்:—

1. மைல் கல்லில் இருந்து சேலம் எத்தனை மைல்? மேட்டூர் எத்தனை மைல்?
2, இரண்டாவது படத்தைப்போல் எங்கே பார்த்திருக்கிறாய்? இந்தக் குளத்துத் தண்ணீரை ஏன் அசுத்தம் செய்யக்கூடாது?
3. மூன்றாவது படத்தைப்போல் கட்டம் போடு. அதில் உங்கள் பள்ளிக்கூடத்தைப்பற்றி எழுது.

(iii) பூர்த்திசெய்:—

கை	கைகள்	மரம்	மரங்கள்
விரல்	———	பழம்	———
பந்து	———	புத்தகம்	———

(iv) படி:—

கொட்டு	சுற்று	தாண்டு	போக்கு
கழுவு	சாப்பிடு	தூங்கு	மூடு
குனி	சமை	தை	முடை
கட்டு	சொல்	நெய்கிறான்	வாங்கு
கௌவு	திற	போடு	விளையாடு
காட்டு	தட்டு	குத்து	விடு

148051

TB
031017
N49

(iv)—தொடர்ச்சி

விழு	பாண்டி	மெதுவாய்	நீ
அழு	பள்ளிக்கூடம்	முதல்	நீங்கள்
இரு	பாட்டனர்	மேல்	அவள்
உண்ணு	பட்சம்	எதனுடன்	அந்த
உட்கார்	பேராசை	எதில்	அது
உருண்டு	பெயர்	எதிர்	அவன்
உருட்டு	பக்கம்	எங்கே	அவர்கள்
உழு	பொருள்	என்ன	கத்தரிக்காய்
உள்ள	மொட்டு	இது	புடலங்காய்
எழுந்திரு	மிட்டாய்	இரவு	பறங்கிக்காய்
கடை	முகம்	இவன்	முருங்கைக்காய்
கோலி	மாலை	இந்த	மிளகாய்
கயிறு	ரயிலடி	இவர்கள்	வாழைக்காய்
காலை	ராட்டை	இவள்	வெண்டைக்காய்
குப்பை	வேகம்	உடை	அவரைக்காய்
காயம்	வர்ணம்	உடல்	செவ்வந்திப்பூ
கூடை	ஒவ்வொன்று	உமி	தாமரைப்பூ
சலாம்	ஒருவர்	அரிசி	பூவரசம்பூ
சோறு	ஓர்	நான்கு	மல்லிகை
சட்டி	அத்தான்	ஐந்து	அல்லி
சட்டை	சுத்த	ஆறு	அரளி
சாக்கட்டி	சின்ன	ஏழு	திராட்சைப்பழம்
துணி	சீரான	எட்டு	பலாப்பழம்
நெல்	சரியான	ஒன்பது	மாம்பழம்
நிழல்	திட்ட	பத்து	ஆரஞ்சுப்பழம்
பொம்மை	நல்ல	நான்	வாழைப்பழம்
பெண்	பின்னே	நாம்	எலுமிச்சம்பழம்

Sri Mahabharatham Press, Kumbakonam. 7—3—49, C 10100

உயிர்மெய் எழுத்துக்கள்

மெய் 18	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
							உயிர் 12					
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	[illegible]
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	[illegible]
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ